தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 ஜூலை 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. சி. பா. ஆதித்தனர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினுக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினுக்கள்–விடைகள், உறுப்பினர்கள் கேட்கின்ற வினுக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

கால்நடை அபிவிருத்தி.

***குறுகிய கால வினு எண் 5—திரு. டி. இராசரத்தினம்:** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னுள் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கால்நடைப் பண்ணையில் 15 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட நட்டத்திற்கு 1965–66 ஆண்டுகளில் விதிமுறைகளை ஒட்டியோ அல்லது திருத்தப்படாமலோ நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், வழங்கப்பட்ட நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு ? எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பழையகோட்டை பட்டயக்காரரின் பண்ணையில் நிறைவேற்றப்பட்ட காங்கேயம் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாடுகளுக்குத் தீவனம் அளிக்க 1952–53 முதல் 1958–59 வரை ஆன தீவனச் செலவு குறித்து, இம்மாநில அரசின் பங்கிற்காகவும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் பங்கிற்காகவும் பழையகோட்டை பட்டையக்காரருக்கு கொடுக்கப்படவேண்டிய மானிய நிலுவையாகிய ரூ. 1,98,973·08, 1965 செப்டம்பர் திங்களில் கொடுக்கப்படுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் தொகை பழைய கோட்டை பட்டையக்காரருக்கும் திருமதி பார்வதி அர்ச்சுனனுக்கும் ஆளுக்குப் பாதி என்ற அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் ரூ. 99,486·54 கொடுக்கப்படவேண்டுமென ஆணையிடப்பட்டது. இச்செலவில் பாதித் தொகையாகிய 99,486·54 ரூபாயை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கொடுத்து விட்டது.

திரு. டி. இராசரத்தினம்: திருத்தப்பட்டு வழங்கப்பட்ட மானியம் எந்தத் தேதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: 1965-ம் வருடம் அக்டோபர் மாதம் 11-ம் தேதியில் ஜி.ஓ. எண் 3359-ன்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம்: அப்படி ஏற்பட்ட நஷ்டத்திற்குப் பதிலாக நஷ்ட ஈடு கொடுத்தது நியாயம்தான் என்று அரசாங்கம் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே அவர்கள் 1952-ல் இருந்து 1959 வரையிலும் வழங்கி அதற்குப்பிறகு அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். மீண்டும் பழையகோட்டை பட்டையக்காரர் அமைச்சர் ஆன பிறகு அந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுபோன்ற கால்நடைப் பண்ணை களை வைத்து ரூ. 500 மதிப்புள்ள மாடுகளை ரூ. 1,500க்கு விற்று கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்களே. ஏன் இதுபோன்ற பண்ணைகளைச் சர்க்காரே நடத்தக்கூடாது ? இனிமேலாவது இதுபோன்ற மானியத் தொகையை வேறு யாருக்கும் கொடுக்காமல் நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிப்பட்டவர்களுக்கு மானியம் வழங்குவதைவிட சர்க்காரே நடத்துவதுதான் நல்லது என்று பல பண்ணை களை நடத்தி வருகின்றனர்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: மந்திரி பதவியைத் துஷ்பிரயோகம் செய்து பெறப்பட்ட மானியம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதைத் திருப்பி வசூல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பதவியை துஷ்பிரயோகம் செய்து வாங்கினார் என்று சொல்வதற்கில்லை. இந்தத் தேதியில் அவர் அமைச்சராக இருந்தார் என்பது மட்டும் குறிப்பிடத்தக்கது.

திரு. ந. சவுந்திர பாண்டியன் : இதுமாதிரி எத்தனை முறை வழங்கி யிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : 1952-ல் இருந்து 1959 வரை யிலும் உள்ள பாக்கியை வழங்கியிருக்கிறார்கள்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1952-க்குப் பிறகு வேறு யாருக்கும் அளிக்காமல் அமைச்சர் அவர்களுக்கு மாத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. வேறு யாருக்காவது அந்த நிலைமை ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கும் அளித்திருப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது குறிப்பிட்ட பண்ணையைப் பற்றியது. மற்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : குறிப்பிட்ட பண்ணையிலே உள்ள மாடுகள் இந்த மாநிலத்திலே வேறு எந்த பண்ணையில் இருக்கும் மாடுகளை விட தரத்தில் உயர்ந்தவை என்று சொல்வது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது கனம் உறுப்பினருடைய கருத்தாக இருக்கலாம். மாறுபட்ட கருத்தும் நிலவுகிறது.

திரு. கே. விநாயகம் : இந்தப் பண்ணையிலே இருந்து மாடுகள் 1952–53லே உயர்ந்ததாக இருந்ததாகவும் அந்த நேரத்திலே அரசாங்கப் பண்ணையிலே இருந்த மாடுகள் அந்த அளவிற்கு வளர்ச்சி அடையவில்லை என்ற கருத்து இருக்கிறது. அந்த அளவிலே அந்தத் தொகை கொடுத் திருக்க வேண்டும். காலதாமதம் ஆகி கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுத் தது நியாயம் தான் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நியாயம்தான் என்று அப் போது இருந்த அரசாங்கம் கருதியது. அந்த அரசாங்கம் அப்படிக் கருதித் தான் மானியம் வழங்கியிருக்கிறார்கள். நாங்கள் ஒன்றும் வழங்கவில்லை.